(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 12 (2).]

# பாராளுமன்றம்

## 12 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2014 ஓகத்து 22 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2014 செத்தெம்பர் 09, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

மாநகர சபைகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*

நகர சபைகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*

பிரதேச சபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*

உள்ளூர் அதிகாரசபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*

நிர்மாணத் தொழில் அபிவிருத்தி — இரண்டாம் மதிப்பீடு.

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரும்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2014 யூலை 21 ஆம் திகதிய 1872/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.08.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

விளையாட்டுத்துறை அமைச்சர்,— விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 34 ஆம் பிரிவின் கீழ் விளையாட்டு அமைச்சரால் ஆக்கப்பட்டு 2014 மே 19 ஆம் திகதிய 1863/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.08.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

சுகாதார அமைச்சர்,— அரச மருந்தகக் கூட்டுத்தாபன வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்-2011,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழில்நுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2014.01.21 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக் களுடனான அரச மருந்தகக் கூட்டுத்தாபன வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.04.24 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

*

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய விஞ்ஞான மன்றத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான தேசிய விஞ்ஞான மன்றத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

*

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.23 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

*

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கட்டளைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கை கட்டளைகள் நிறுவகச் சட்டத்தின் 37(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான இலங்கை கட்டளைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

*

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் வருடாந்த அறிக்கை 2011,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.22 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

*

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1981 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் சட்டத்தின் 36(4) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.22 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

*

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் வருடாந்த அறிக்கை-2011,— 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபைச் சட்டத்தின் 29(5) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

*

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை-2011,— 1969 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அணுசக்தி அதிகார சபைச் சட்டத்தின் 34(2) ஆம் பிரிவிற்கமைய தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

*

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.23 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

*

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை-2011,— 1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கை புத்தாக்குநர் ஊக்குவிப்புச் சட்டத்தின் 27 ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

*

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சீ. கிளார்க்கின் வருடாந்த அறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க்கின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

## 2014 செத்தெம்பர் 23, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2581/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) வட மாகாணத்தில் மின்சார வசதியற்ற கிராமங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) குறித்த கிராமங்களின் பெயர்கள் யாவை என்பதையும்

மாவட்ட வாரியாக வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே கூறப்பட்டுள்ள மின்சார வசதியற்ற கிராமங்களுக்கு எக்காலப்பகுதியில் மின்சாரத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும்;

(ii) 2012ஆம் ஆண்டினுள் வட மாகாணத்தில் மின்சார வசதியற்ற அனைத்துக் கிராமங்களுக்கும் மின்சாரத்தை வழங்கக் கூடிய இயலுமை காணப்பட்டதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3240/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தொடர்பாக,

(i) 2012 ஆம் ஆண்டுக்கான மற்றும் இற்றை வரைக்குமான இலாபம் அல்லது நட்டத்தையும்;

(ii) 2015 - 2016 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் எதிர்பார்க்கப்படும் இலாபம் அல்லது நட்டத்தையும்;

(iii) இன்றுள்ளவாறான மூலதனம் மற்றும் ஒதுக்கங்களையும்;

(iv) இந் நிறுவனத்தில் தொழில் புரியும் நபர்களின் எண்ணிக்கையையும்;

(v) இந்நிறுவனத்தில் மிகை ஊழியர்களை கொண்டுள்ளதா அல்லது குறைவான ஊழியர்களைக் கொண்டுள்ளதா என்பதையும்;

(vi) ஒரு ஊழியருக்கான செலவினம் மற்றும் ஊழியர் ஒருவருக்கான இலாபத்தையும்;

(vii) இன்றுள்ளவாறு வங்கி மேலதிகப் பற்றுகளுடன் குறுங்கால நடுத்தர மற்றும் நீண்டகால கடன்கள் ஆகியவற்றின் மொத்தத்தையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3688/ '13

கௌரவ அனுர திஸாநாயக்க,— கலாசார, கலை அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) 2011 மற்றும் 2012 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்குமென ஒரு அரச நாடக விழாவே நடாத்தப்பட்டதென்பதையும்;

(ii) ஆண்டுதோறும் நடாத்தப்படவேண்டிய மேற்படி விழா, மேலே குறிப்பிடப் பட்டுள்ளவாறு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடாத்தப்பட்டமைக்கு நிதி இன்மையே காரணமாகும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடாத்தப்பட்ட அரச நாடக விழாவுக்கென ஒதுக்கப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி பணத் தொகை செலவிடப்பட்ட விதம் வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) அரச அனுசரணையுடன், தாமரைத் தடாகம் மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச அரங்கேற்றக்கலை மண்டபத்தில் நடாத்தப்பட்ட "மஹ சமயம" நிகழ்ச்சிக்கு ஒதுக்கப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி பணத் தொகை கிடைத்த விதம் யாதென்பதையும்;

(iii) மேற்படி நிகழ்ச்சியின் ஒவ்வொரு நடவடிக்கைக்கெனவும் குறித்த பணத் தொகை செலவிடப்பட்ட விதம் வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3919/ '13

கௌரவ புத்திக பதிரண,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மா, வாழை, பப்பாளி போன்ற பழங்களை நீண்ட நாட்கள் வைத்திருப்பதற்கும் விரைவாக பழுக்க வைப்பதற்குமாக சில வர்த்தகர்கள் இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்துகின்றனரென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அவ்வாறு பயன்படுத்தப்படுகின்ற இரசாயனப் பொருட்களின் விஞ்ஞான, இரசாயன மற்றும் வர்த்தகப் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி இரசாயனப் பொருட்களில் மனித உடலுக்கு பாதகமான இரசாயனப் பொருட்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பழங்களை பழுக்க வைப்பதற்காகவும் நீண்ட நாட்கள் வைத்திருப்பதற்காகவும் மனித உடலுக்கு பாதகமான இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்துகின்ற வர்த்தகர்களை சட்டத்தின் பிடியில் சிக்கவைப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் சட்டத்தின் பிடியில் சிக்க வைக்கப்பட்ட அத்தகைய வர்த்தகர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இவர்களில் தண்டனை வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4433/ '13

கௌரவ (திருமதி) தலதா அத்துகோரல,— பிரதம அமைச்சரும் புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) இந்திய பாதுகாப்பு அமைச்சரால் லோக் சபாவில் வெளியிடப்பட்ட கூற்றுக்கு அமைவாக இந்தியா இலங்கையிலிருந்து ஆயுதங்களை கொள்வனவு செய்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி ஆயுத கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்பட்ட திகதி தென்பதையும்;

(iii) இந்தியாவினால் இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட ஆயுத வகைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி ஆயுத விற்பனையின் மூலம் இலங்கைக்கு கிடைத்த வருமானம் எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி கொடுக்கல் வாங்கலின் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்துகின்ற அறிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4506/ '13

கௌரவ சுஜீவ சேனசிங்க,— சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கன் விமானக் கம்பனிக்காக புதிதாக பத்து ஆகாய விமானங்களைக் கொள்வனவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதென்பதை அறிவாரா;

(ii) கொள்வனவு செய்ய எதிர்பார்த்துள்ள மேற்படி ஆகாய விமானங்களுக்காக செலவிட உத்தேசித்துள்ள பணத் தொகை யாது;

(iii) மேற்படி ஆகாய விமானங்கள் எந்நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கன் விமானக் கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) விமானக் கம்பனி 2013 சனவரி முதல் இற்றைவரை அடைந்துள்ள நட்டம் தனித்தனியாக எவ்வளவு;

(ii) அதிகளவு நட்டத்துடன் பேணிவரப்படுகின்ற ஸ்ரீ லங்கன் விமானக் கம்பனிக்காக புதிதாக ஆகாய விமானங்களைக் கொள்வனவு செய்ய நிதி ஏற்பாடுகள் பெறப்படுகின்ற விதம் யாது;

(iii) மேற்படி புதிய ஆகாய விமானங்கள் கொள்வனவு செய்யப்படுவதை அங்கீகரிக்கிறாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4588/ '13

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) சூதாட்ட விதிப்பனவு மற்றும் பிற தொடர்புடைய வரிகளின் கொடுப்பனவுக்காக "மெரினா கொழும்பு" என்ற பெயரில் அல்லது இதே போன்ற ஒரு பெயரில் ஒரு கசினோ பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அது முதல் முறையாக எப்போது பதிவு செய்யப்பட்டது என்பதையும்; மற்றும்

(iii) மேற்படி கசினோ எந்தப் பெயரின் (தனிநபர் அல்லது நிறுவனம்) கீழ் பதிவு செய்யபட்டது என்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4590/ '13

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் இயங்கி வரும் முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்கள் மற்றும் முன்பள்ளிகள் தொடர்பாக பேணி வரப்படுகின்ற பதிவேடொன்று அமைச்சில் உள்ளதா என்பதையும்;

(ii) அதன்படி, தற்போது காணப்படும் முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்கள் மற்றும் முன்பள்ளிகளின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி அனைத்து பாடசாலைகளும் மத்திய அரசாங்கத்தின் அல்லது மாகாண சபையின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) முன்பள்ளிகளை பதிவு செய்கின்றபோது பயன்படுத்தப்படும் பிரமாணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களின் ஆசிரியர்கள் மற்றும் நிருவாகிகளுக்கு இருக்க வேண்டியதென அமைச்சு அங்கீகரித்துள்ள குறைந்தபட்ச தகைமைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஆசிரியர்கள் மற்றும் நிருவாகிகள் உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளனரா என்பதையும்;

(iii) முன்பள்ளிகளை மற்றும் முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களை மேம்படுத்துவதற்கும், அவற்றை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் அரசாங்கம் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4741/ '14

கௌரவ அசோக் அபேசிங்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நாட்டில் உள்ள பாடசாலைகளில் 06 ஆவது தரத்திலிருந்து உயர்தரம் வரை அழகியற்கலை பாடங்கள் கற்பிக்கப்படும் பாடசாலைகள் யாவை என்பதையும்;

(ii) குருணாகல் மாவட்டத்தில் உள்ள அத்தகைய பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) குருணாகல் மாவட்ட பாடசாலைகளில் சேவையாற்றுகின்ற சங்கீதம், நடனம், சித்திரம் மற்றும் நாடகமும் அரங்கக் கலையும் ஆகிய அழகியற்கலை பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி மாவட்டத்தில் அழகியற்கலை ஆசிரியர்களின் தேவைப்பாடு உள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4845/ '14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) நுரைச்சோலை அனல்மின் நிலையம் தரமற்ற மின்நிலையமென வலு, சக்தி அமைச்சின் செயலாளர் கூறியுள்ளாரென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) மேற்படி மின்நிலையத்தின்,

(i) முதலாம் கட்டத்திற்காக மதிப்பிடப்பட்ட பணத் தொகை மற்றும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு;

(ii) தரம், உபகரணங்கள் மற்றும் செயற்பாட்டு நிலைமை சம்பந்தமாக ஏற்புடைய நிர்மாணிப்புக் கம்பனியுடன் உத்தரவாதக் காலப்பகுதியுடனான உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததா;

(iii) தரமற்ற நிலைமை மற்றும் இடம்பெறுகின்ற செயலிழப்புக்கள் சம்பந்தமாக மின்நிலையத்தை நிர்மாணித்த கம்பனிக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை;

(iv) திருத்தவேலைகளுக்காகவும் அக்காலப்பகுதியில் இழந்த மின்சாரத்தை பெற்றுக் கொள்வதற்காகவும் செலவாகிய பெருந்தொகைப் பணத்தை அதற்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுப்பாரா;

(v) முதலாம் கட்டத்தை சரிவர நிர்மாணிக்காத கம்பனியே அதன் அடுத்த கட்டங்களையும் நிர்மாணிப்பதாயிருப்பின் அதற்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) எதிர்காலத்தில் பொதுமக்களுக்கு நன்மைகளைப் பெற்றுக்கொடுக்கக்கூடிய வகையில் மின்சாரத்தை உற்பத்திசெய்ய திட்டமிடப்படுள்ளதா;

(ii) மின்சாரக் கட்டணப்பட்டியல் குறைவடைய ஏதுவாக அமையக்கூடிய அத்திட்டம் காலவரையறைகள் சகிதம் யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4871/ '14

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) நுரைச்சோலை அனல்மின் உற்பத்தி நிலையத்தின் செயலிழப்புகள் மற்றும் பராமரிப்புப் பணிகள் காரணமாக உற்பத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளதால் தேசிய மின் முறைமை இதுவரையில் இழந்துள்ள மின் கொள்ளளவு யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2014 பெப்ரவரி 13 ஆம் திகதி நுரைச்சோலை அனல்மின் உற்பத்தி நிலையத்தின் கன்டென்சர் தொகுதிக்கு உப்பு அல்லது அதையொத்த ஏதேனும் இரசாயனப் பொருள் சேர்க்கப்பட்டுள்ளதாக முன்வைக்கப்பட்ட கூற்றில் உண்மை உண்டா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பாக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணைகள் யாவை என்பதையும்;

(iii) அது தொடர்பில் குற்றவாளிகளான நபர்கள் யாவர் என்பதையும்;

(iv) இவர்கள் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4945/ '14

கௌரவ ஆர். எம். ரஞ்ஜித் மத்தும பண்டார,— வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தின், மடுள்ள பிரதேச செயலாளர் பிரிவில் அப்போதைய ஆற்றுப்படுகை அபிவிருத்திச் சபைக்கு உரித்தானதாக காணப்பட்ட "பதுளுவெல பாதுகாக்கப்பட்ட வனத்தில்" சுமார் 50 – 60 வருடங்கள் பழைமைவாய்ந்த தேக்குமரப் பயிர்ச் செய்கை காணப்படுகின்றதென்பதையும்;

(ii) குறிப்பிட்டதொரு ஆள் போலி ஆவணங்களைத் தயாரித்து மேற்படி காணியை சொந்த அறுதி உரித்துடைய காணியாக அனுபவித்து வருகின்றார் என்பதையும்;

(iii) ஒரு சில ஆட்கள் அரசாங்கத்திற்கு சொந்தமான மேற்படி தேக்கு மரப் பயிர்ச் செய்கையை அழித்து வருகின்றார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) பல வருடங்களாக பாதுகாக்கப்பட்டு வந்துள்ள பதுளுவெல பாதுகாக்கப்பட்ட வனத்தின் தேக்குமரக் காட்டை அத்துமீறியோர்களிடமிருந்து பாதுகாப்பதற்கான துரித நடவடிக்கையை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4962/ '14

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கடந்த ஆண்டு உர மானியம் வழங்கப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு பயிர் வகைகளுக்கும் ஏற்ப வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உர மானியத் திட்டத்தின் கீழ் கடந்த வருடம் தொடக்கம் வழங்கப்பட்ட ரூபா 350/- உரப் பொதியொன்றுக்கு ரூபா 150/- காப்புறுதித் தொகையாக மேலதிகமாக அறவிடப்பட்டதென்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், மானியத்தின் கீழ் வழங்கப்படும் ஓர் உரப்பொதிக்காக ரூபா 150/- மேலதிகமாக அறவிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட காப்புறுதியின் அடிப்படை யாது;

(iii) மேற்படி காப்புறுதி ஆரம்பிக்கப்பட்ட திகதி தொடக்கம் இதுவரை விவசாயிகளிடமிருந்து அறவிடப்பட்ட மொத்த பணத் தொகை எவ்வளவு;

(iv) மேற்படி காப்புறுதியின் கீழ் உரிமைக் கோரல்களுக்காக நிறைவு செய்ய வேண்டிய நிபந்தனைகள் யாவை;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5167/ '14

கௌரவ ஜோன் அமரதுங்க,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வத்தளை பிரதேச செயலாளர் பிரிவில், 179 ஆம் இலக்கம், எலபிட்டிவல கிராம அலுவலர் பிரிவின், நவம்மஹர கிராமத்திலுள்ள அரசாங்க காணிகளில் அத்துமீறிக் குடியேறியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி அத்துமீறிக் குடியேறிய குடும்பங்களின் பிரதான குடியிருப்பாளர்களின் பெயர்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) மேற்படி குடும்பங்களில் அதிகளவு குடும்பங்கள் 20 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலம் மேற்படி கிராமத்தில் வசித்துவந்த போதிலும், இற்றை வரை இவர்களது காணிகளுக்கு நிரந்தர காணி உறுதியோ அல்லது தற்காலிக உரிமப்பத்திரமோ வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) இவர்கள் வசிக்கும் காணிகளுக்கு நிரந்தர காணி உறுதிகளை பெற்றுக்கொடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) நிரந்தர காணி உறுதிகளை பெற்றுக்கொடுக்கும் வரை தற்காலிக உரிமப்பத்திரம் பெற்றுக்கொடுக்கப்படுமா என்பதையும்;

(v) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5359/ '14

கௌரவ அ. விநாயகமூர்த்தி,— சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பலாலி விமான நிலையத்தின் நிர்மாண வேலைகள் எப்போது பூர்த்தியடையுமென்பதையும்;

(ii) பொதுமக்கள் பாவனைக்காக அது எப்போது திறக்கப்படுமென்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2014 செத்தெம்பர் 24, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2642/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெண்கள் தலைமையிலான குடும்பங்களுக்கு பொருத்தமான பொருளாதார செயற்பாட்டில் ஈடுபடுவதற்காக ஒரு குடும்பத்திற்கு ரூபா 2 இலட்சத்தை விஞ்சாத கடன்தொகையொன்றை சலுகை வட்டி அடிப்படையில் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இக்கடன்தொகை வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3247/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) குடிவரவு குடியகல்வு திணைக்களம் தொடர்பாக,

(i) 2012ஆம் ஆண்டு முதல் இற்றை வரை ஏற்பட்டுள்ள இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(ii) 2015 - 2016 ஆம் ஆண்டுகளுக்காக எதிர்வுகூறப்பட்ட இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(iii) இன்றுள்ளவாறு மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள் எவ்வளவு என்பதையும்;

(iv) நிறுவனத்தில் பணியாற்றும் நபர்களின் எண்ணிக்கையையும்;

(v) அங்கு பணியாளர்கள் தேவைக்கு அதிகமாகவா அல்லது குறைவாகவா உள்ளனர் என்பதையும்;

(vi) ஊழியர் ஒருவருக்கான செலவு மற்றும் ஊழியர் ஒருவருக்கான இலாபம் ஆகியன எவ்வளவு என்பதையும்;

(vii) இன்றுள்ளவாறு வங்கி மேலதிகப் பற்றுகளுடன் குறுகிய காலக்கடன், நடுத்தர மற்றும் நீண்டகாலக் கடன்கள் ஆகியவற்றின் மொத்தம் எவ்வளவு என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3701/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (5)

(அ) (i) அரசாங்கத்துக்கு வரி செலுத்துகின்ற அரச மற்றும் தனியார் எரிபொருள் சந்தைப்படுத்தல் கம்பனிகள் யாவை;

(ii) கடந்த 10 வருட காலப் பகுதியினுள் மேற்படி ஒவ்வொரு கம்பனியும் வருடாந்தம் செலுத்திய வரியின் அளவுகள், ஒவ்வொரு வகை வரிக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(iii) வரி செலுத்துகையில் ஏதேனும் ஒரு கம்பனிக்கு ஏதேனும் வரி விடுவிப்பு வழங்கப்பட்டுள்ளதா;

(iv) ஆமெனில், மேற்படி கம்பனிகளின் பெயர்கள் யாவை;

(v) இத்தகைய வரிச் சலுகையை வழங்குவதற்கான காரணங்கள் யாவை;

(vi) கடந்த பத்து வருட காலப் பகுதியினுள் மேற்படி வரி விடுவிப்பு வழங்கப்பட்டமையின் காரணமாக இலங்கை அரசாங்கம் இழந்துள்ள வரித் தொகை ஒவ்வொரு வகை வரிக்கும் ஏற்ப வருடாந்தம் வெவ்வேறாக யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3963/ '13

கௌரவ புத்திக பதிரண,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மா நகர சபையின் கொஹாகொடையில் கழிவுகளை அகற்றுவதற்காகப் பயன்படுத்தப்படும் இடத்திலிருந்து உருவாகும் கசிவுத் திரவம் மகாவலி கங்கையுடன் சேர்கின்றதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி இடத்திலிருந்து வெளியேறும் கசிவுத் திரவத்தின் பீ.எச்.பெறுமதி, மின் கடத்துதிறன், தெளிவுத்தன்மை, வெப்பம், எண்ணெய் மற்றும் மசகு, உயிர் ஒட்சிசன் கேள்வி (BOD) மற்றும் இரசாயன ஒட்சிசன் கேள்வி (COD) ஆகிய பௌதீக மற்றும் இரசாயனப் பண்புகளுக்கு ஏற்புடையதான பெறுமதிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி கசிவுத் திரவத்தில் உள்ளடங்கியுள்ள குரோமியம், கெட்மியம், ஈயம் மற்றும் பாதரசம் ஆகிய கன உலோகங்களினதும் பொசுபேட் மற்றும் நைட்ரேட் ஆகிய ஆக்கக் கூறுகளினதும் உள்ளடக்கம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கொஹாகொட குப்பை மேட்டின் காரணமாக மகாவலி கங்கையில் தொடர்ச்சியாகச் சேர்கின்ற கன உலோகப் பொருட்களைக் கொண்ட கசிவுத் திரவம் நிலக் கீழ் நீர்த் தொகுதியுடன் சேர்வதானது பாதகமானதொரு நிலைமையாகுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில் இந் நிலைமையைத் தடுப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4181/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நகர அபிவிருத்தி அதிகாரசபையின் எஹலியகொட - நாபாவல மற்றும் எஹலியகொட - பனாவல வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கான திட்டத்திற்கமைய,

(i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்ய செலவாகும் உயர்ந்தபட்ச பணத்தொகை எவ்வளவு;

(ii) மேற்படி அபிவிருத்திக் கருத்திட்டத்துக்காக அகற்ற வேண்டிய வீடுகள், வர்த்தக நிலையங்கள் மற்றும் வேறு கட்டிடங்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(iii) அவ்வாறு அகற்றப்படுகின்ற வீடுகள், வர்த்தக நிலையங்கள் மற்றும் வேறு கட்டிடங்களுக்காக நட்டஈடு வழங்குவதற்கான முறையியலொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4625/ '13

கௌரவ சுஜீவ சேனசிங்ஹ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாடசாலைகளில் வரலாறுப் பாடத்தை ஆங்கில மொழி மூலம் கற்பித்தல் தற்போது சுமார் 1 ½ வருடங்களாக நிறுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) பிள்ளைகளுக்கு வரலாறுப் பாடத்தைக் கற்பித்தல் முக்கியமற்றதொரு விடயமாக அரசாங்கம் கருதுகின்றதா என்பதையும்;

(iv) இன்றேல், ஆங்கில மொழி மூலம் பாடசாலைகளில் வரலாறு கற்பிக்க முடியாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4637/ '13

கௌரவ பி. ஹரிசன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கு விவசாய விதைகளை இறக்குமதி செய்யும் நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) விதைகளை இறக்குமதி செய்யும் நிறுவனமொன்றிற்கு அதற்காக இருக்கவேண்டிய தகைமைகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களில் விவசாய விதைகளைப் பற்றிய அறிவு உள்ளவர்கள் கட்டாயம் பணியாற்ற வேண்டுமென்ற தேவைப்பாடு உள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், இவர்களுக்கு இருக்கவேண்டிய தகைமைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அரசினால் விதைகள் இறக்குமதி செய்யப்படும் நிறுவனங்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்களினால் இறக்குமதி செய்யப்படும் விதை வகைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) ஆமெனில், மேற்படி நிறுவனங்களின் பெயர்களை அவர் சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஈ) (i) தனியார் நிறுவனங்களினால் இறக்குமதி செய்யப்படும் விதைகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு நிறுவனமொன்று உள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

4734/ '14

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது ஓய்வூதியம் பெறும் ஓய்வுபெற்றவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) ஒரு வருடத்துக்குள் மேற்படி எண்ணிக்கையுடன் புதிதாக சேர்ந்துவிடும் ஓய்வுபெற்றவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) ஓய்வு பெறும் வயதை பூர்த்தி செய்ததன் பின்னர் ஓய்வுபெற்றவருக்கு தமது ஓய்வூதியத்தை பெறுவதற்கு எவ்வளவு காலம் ஆகுமென்பதையும்;

(ii) அதன் பிரகாரம் ஓய்வூதியம் பெறுவதில் ஏதேனும் தாமதம் ஏற்படுவதாயின், அதற்கான காரணங்களாக ஓய்வூதிய திணைக்களம் இணங்கண்டுள்ள விடயங்கள் யாவையென்பதையும்;

(iii) வெளிநாடு சென்றுள்ள ஓய்வுபெற்றோர் அதேபோன்று இந்நாட்டிலுள்ள ஓய்வுபெற்றோர் உயிருடன் இருக்கின்றனரா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு பின்பற்றப்படும் வழிமுறை யாதென்பதையும்;

(iv) மேற்படி வழிமுறையின் ஊடாக உரிய விதத்தில் தேவையான தகவல்களை பெற முடியுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2013 ஆம் ஆண்டில் ஓய்வுபெற்ற போதிலும் இற்றை வரை தமது ஓய்வூதிய பணிக்கொடையை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்களது ஓய்வூதிய பணிக்கொடை கிடைக்காமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) ஓய்வூதிய பணிக்கொடையைப் பெறுவதில் ஏற்படும் தாமதமானது, ஓய்வூதியம் பெறுதல் தாமதமடைவதற்கு காரணமாகியுள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) மேலே குறிப்பிடப்பட்டுள்ள தாமதங்களை தடுப்பதற்காக அமைச்சு செயற்படுத்தியுள்ள வேலைத் திட்டங்கள் யாவையென்பதையும்

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4763/ '14

கௌரவ அசோக் அபேசிங்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) மாவட்ட செயலகங்களின் ஊடாக விவசாய விதை பக்கெட்டுகளை விநியோகிக்கும் வேலைத் திட்டமொன்று செயற்படுத்தப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்ட விதை பக்கெட்டுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி வேலைத்திட்டத்தின் மூலமாக எதிர்பார்க்கப்பட்ட பயனை பெற்றுக்கொள்ள முடிந்ததா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4852/ ' 14

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2013 ஆம் ஆண்டில் சூதாட்ட அலுவல்களை நடத்துவதற்காக உண்ணாட்ரசிறைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள பதிவுகளின் எண்ணிக்கையினையும்;

(ii) இப்பதிவுகள் வழங்கப்பட்ட நபர்களின் பெயர்களையும்;

(iii) மேற்கூறப்பட்ட பதிவுகள் வழங்கப்பட்ட சரியான திகதிகளையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4960/ '14

கௌரவ நிரோஷன் பெரேரா,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்பகு,— (1)

(அ) (i) வடமேல் மாகாண சபையின் கடற்றொழில் அமைச்சின் மூலம் மீனவர்களுக்கு படகுகள் வழங்குவதற்கான வேலைத் திட்டமொன்று செயற்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) மேற்படி படகுகள் வழங்கப்பட்ட மீனவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை யாதென்பதையும்;

(iii) ஒவ்வொரு படகு வகையின் பொருட்டும் மீனவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத்தின் பெறுமதி எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மீனவர்களுக்கு வழங்கப்படும் மேற்படி படகு வகைகள் மற்றும் அவற்றின் விலைகள் தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) மேற்படி படகொன்றின் உற்பத்திச் செலவு ஒவ்வொரு படகு வகை ரீதியாக தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) வடமேல் மாகாண சபையின் மூலம் 2010 ஆம் ஆன்டு முதல் இற்றைவரை ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுக்கும் வருடாந்தம் வழங்கப்பட்டுள்ள மீன்பிடிப் படகுகளின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4963/ '14

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— உயர்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ பட்டப் பாடநெறிக்காக சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பட்டப் பாடநெறி ஆரம்பிக்கப்பட்ட வருடம் யாது;

(ii) குறிப்பிட்ட பாடநெறியை கற்பதற்காக ஒரு வருடத்தில் சேர்த்துக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள உள்ளக மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(iii) கடந்த வருடத்தில் முகாமைத்துவ பட்டத்துக்காக சேர்த்துக் கொள்ளப்பட்ட உள்ளக மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5022/ '14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— நெடுஞ்சாலைகள், துறைமுககங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கம்பஹா – மிரிஸ்வத்த தொடக்கம் வத்துருகம வரையிலான வீதி விஸ்தரிப்பு கருத்திட்டத்திற்கு செலவாகும் மொத்தப் பணத் தொகை எவ்வளவு;

(ii) மேற்படி கருத்திட்டத்துக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின் பிரதியொன்றை சபையில் சமர்ப்பிப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை விஸ்தரிப்பதற்கான ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொண்ட நிறுவனத்தின் பெயர் யாது;

(ii) மேற்படி நிறுவனத்தை தெரிவுசெய்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட கேள்விப் பத்திர நடைமுறைகள் பின்பற்றப்பட்டனவா;

(iii) முறைசார்ந்த கேள்விப்பத்திர நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை எனில், அதற்கான காரணம் யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி வீதியை விஸ்தரிப்பதற்காக காணிகள் சுவீகரிக்கப்பட்ட வருடம் யாது;

(ii) சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு நட்டஈடு செலுத்தப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், அந்த நட்டஈடு செலுத்தப்பட்ட வருடம் யாது;

(iv) தற்போது மேலே குறிப்பிட்டவாறு சுவீகரிக்கப்பட்ட அனைத்து காணிகளுக்கும் நட்டஈடு செலுத்தி முடிக்கப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5160/'14

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் பிரசைகளாக இருந்து பின்னர் வேறொரு நாட்டின் பிரசாவுரிமை கிடைத்தமையால் இலங்கையின் பிரசாவுரிமையை இழந்த ஆட்களால் இரட்டைப் பிரசாவுரிமையைப் பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப் பத்திரங்களை பரிசீலனை செய்தல் தொடர்பில் கடைப்பிடிக்கப்படுகின்ற கொள்கை யாது;

(ii) அத்தகைய விண்ணப்பப் பத்திரங்களை பரிசீலனை செய்தல் சம்பந்தமாக தாமதம் நிலவுகின்றதென்பதை அறிவாரா;

(iii) மேலே குறிப்பிடப்பட்ட தாமதத்தை தவிர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

(iv) இரட்டைப் பிரசாவுரிமையைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டு இற்றைவரை பரிசீலனை செய்து முடிக்கப்படாத விண்ணப்பப் பத்திரங்களின் எண்ணிக்கை யாது;

(v) 2010.01.01 ஆந் திகதிக்குப் பின்னர் இரட்டைப் பிரசாவுரிமை அளிக்கப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5194/ '14

கௌரவ சுனில் ஹந்துன்நெத்தி,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013.07.25ஆம் திகதியில் உள்ளவாறு, வரையறுக்கப்பட்ட கொழும்பு மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிச் சங்க அங்கத்தவர்களின் கடன்தொகைகளில் காணப்படும் நிலுவைத் தவணைகளின் நிலைமை பற்றிய அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா;

(ii) நிலுவைத் தவணைகள் இரண்டுக்கு மேற்பட்ட கடன் தொகை யாது;

(iii) மேற்படி கடன்களைப் பெற்றுக் கொண்டவர்களின் பெயர்கள் யாது

என்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) வ/ப கொழும்பு மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிச் சங்கத்திற்கு அறவிடப்பட வேண்டியுள்ள நிலுவைக் கடன் தவணைகளை அறவிடுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(ii) கூட்டுறவுச் சட்டத்தின் பிரகாரம் கிராமிய வங்கிச் சங்கத்தினால் கடன் வழங்குவதற்கு இயலுமாயுள்ளது அங்கத்துவ வங்கிகளுக்கா அல்லது நபர்களுக்கா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2014 செத்தெம்பர் 25, வியாழக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2652/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) மகிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலை நோக்கில் குறிப்பிடப் பட்டுள்ளதற்கமைய 25 பிரதான நகரங்களில் தகவல் தொழில்நுட்ப நிலையங்கள் தாபிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், தாபிக்கப்பட்டுள்ள மேற்படி தகவல் தொழில்நுட்ப நிலையங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதான நகரத்துக்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3248/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கைச் சுங்கம் தொடர்பாக,

(i) 2012ஆம் ஆண்டு முதல் இற்றை வரை ஏற்பட்டுள்ள இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(ii) 2015 - 2016 ஆம் ஆண்டுகளுக்காக எதிர்வுகூறப்பட்ட இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(iii) இன்றுள்ளவாறு மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள் எவ்வளவு என்பதையும்;

(iv) நிறுவனத்தில் பணியாற்றும் நபர்களின் எண்ணிக்கையையும்;

(v) அங்கு பணியாளர்கள் தேவைக்கு அதிகமாகவா அல்லது குறைவாகவா உள்ளனர் என்பதையும்;

(vi) ஊழியர் ஒருவருக்கான செலவு மற்றும் ஊழியர் ஒருவருக்கான இலாபம் ஆகியன எவ்வளவு என்பதையும்;

(vii) இன்றுள்ளவாறு வங்கி மேலதிகப் பற்றுகளுடன் குறுகிய காலக்கடன், நடுத்தர மற்றும் நீண்டகாலக் கடன்கள் ஆகியவற்றின் மொத்தம் எவ்வளவு என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3718/ '13

கௌரவ அனுர திஸாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கடந்த நான்கு வருட காலப்பகுதியில் ஒவ்வொரு போகத்திலும் அரசாங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்டுள்ள மொத்த நெல்லின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நெல்லின் அளவானது ஒவ்வொரு போகத்திற்குமான மொத்த உற்பத்தியில் எத்தனை சதவீதம் என்பதையும்;

(iii) கடந்த வருடம் நெல் கொள்வனவுக்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) கடந்த நான்கு வருட காலப்பகுதியில் நெல் கொள்வனவுக்காக பணம் பெற்றுக்கொள்ளப்பட்ட விதம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஒவ்வொரு போகத்திலும் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் விற்பனை செய்யப்பட்ட விலைகள், கொள்வனவு செய்த நபர்கள் மற்றும் அந்த ஒவ்வொரு நபரும் கொள்வனவு செய்த அளவு தனித்தனியாக யாவையென்பதையும்;

(ii) மேற்படி நெல் கொள்வனவின் ஊடாக பெறப்பட்டுள்ள இலாபம்/ நட்டம் வருடாந்தம் தனித் தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) நட்டம் ஏற்பட்டிருப்பின் அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4053/ '13

கௌரவ புத்திக பதிரண,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நக்கல்ஸ் வன ஒதுக்கத்தில் அனுமதியற்ற ஏலக்காய் வாடிகளை கலற்றி அகற்றுவதற்கு நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட வெளியேற்றல் கட்டளையை நடைமுறைபடுத்துவதற்காக வனப் பாதுகாப்பு திணைக்களத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் தேவையான ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொடுக்காதமையினால் மீண்டும் மேற்படி பிரதேசங்களில் அனுமதியற்ற ஏலக்காய் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்;

(ii) அனுமதியற்ற ஏலக்காய் செய்கையின் காரணமாக நக்கல்ஸ் வன ஒதுக்கப் பிரதேசத்தில் மேல் மலைக் காட்டுத் தொகுதியின் இருப்புக்கு குந்தகம் ஏற்படுகின்றதென்பதையும்;

(iii) காடு பேணல் பணிப்பாளர் நாயகத்தினால் ஆற்றுப்படுத்தப்பட்ட 2012.07.30 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் சனாதிபதியின் செயலாளரது ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளும் வரை மேற்படி நீதிமன்றக் கட்டளையை நடைமுறைப்படுத்த வேண்டாமென அறிவிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) அவ்வாறு அறிவிக்கப்பட்டு ஒரு வருடத்திற்கும் அதிக காலம் கடந்திருப்பினும் இன்று வரை அது சம்பந்தமாக ஆலோசனை பெறப்படவில்லையென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நீதிமன்றக் கட்டளையை நடைமுறைப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மீண்டும் கட்டளையிட நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4293/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெலிவேரிய ரத்துபஸ்வல பிரதேசத்தில் குடிநீர் மாசடைவதற்கு காரணமாக இருந்ததென கருதப்படும் இறப்பர் கையுறைத் தொழிற்சாலையின் பெயர் என்ன என்பதையும்;

(ii) மேற்படி தொழிற்சாலையின் உரிமையாளர்கள் யாவரென்பதையும்

(iii) மேற்படி தொழிற்சாலையின் பங்குடைமைக் கம்பனிகள் அல்லது நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iv) இத்தொழிற்சாலை தொடர்பில் சுற்றாடல் தரப் பரிசோதனை மேற்கொள்ளப் பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4626/ '13

கௌரவ சுஜீவ சேனசிங்ஹ,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ராஜகிரியவில் அமைந்துள்ள திரு. ரவி வெத்தசிங்கவின் குடும்பத்திற்கு உரித்தான 3 ½ ஏக்கர் காணி நகர அபிவிருத்தி அதிகார சபையினால் சுவீகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்காணி சுவீகரிக்கப்பட்டுள்ள அடிப்படை யாது என்பதையும்;

(iii) அக்காணி சுவீகரிக்கப்பட்டமைக்கு சட்டபூர்வமான தன்மை உண்டா என்பதையும்;

(iv) மேற்படி காணி சுவீகரிக்கப்பட்ட பின்னர் அக்காணியில் மேற்கொள்ளப்படுகின்ற பொதுப் பணி யாது என்பதையும்;

(v) காணியைச் சுவீகரிக்கும் போது ஒரு பர்சஸிற்கு செலுத்தப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4638/ '13

கௌரவ பி. ஹரிசன்,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் சேதன உரம் உற்பத்தி செய்வதற்காக 2011 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டதில் ரூபா 300 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி பணத் தொகையை செலவிட்டு ஆரம்பிக்கப்பட்ட சேதன உரம் உற்பத்தி நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி உற்பத்தி நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ள மாவட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) அந்தந்த மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் பெயர்கள் மற்றும் முகவரிகளை தனித்தனியாகவும்

அவர் சபாபீடத்திற்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பணத்திலிருந்து தனியார் துறையைச் சேர்ந்தவர்களுக்கு சேதன உரம் உற்பத்தி செய்வதற்காக நிதியுதவி மற்றும் உபகரணங்கள் வழங்கப்படுதலும் மற்றும், கருத்தரங்குகளும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களும் நடத்தப்பட்டிருப்பின், அப்பயனாளிகளின் பெயர்கள், முகவரிகள் மற்றும் அதற்காக செலவிடப்பட்டுள்ள பணத் தொகை வெவ்வேறாக யாவையென்பதை அவர் சபா பீடத்திற்குச் சமர்ப்பிப்பாரா?

(ஈ) (i) மேற்படி பணம் செலவிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட சேதன உரம் உற்பத்திச் செயன்முறையின் ஊடாக வருடாந்தம் சந்தைக்கு எத்தனை கிலோகிறாம் உரம் விநியோகிக்கப்படுகின்றதென்பதையும்;

(ii) வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியின் மூலம் ரூபா 400 விலையில் சேதன உரம் கொள்வனவு செய்யப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளதற்கமைய, தற்போது கொள்வனவு செய்யப்பட்டுள்ள உரத்தின் அளவு யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

4735/ '14

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது நாட்டிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றில் தற்போது இயங்கும் நிலையிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மஹரகம ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தற்போது பயிற்சி பெறுகின்ற ஆசிரிய மாணர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஆங்கில ஆசிரியர் யிற்சிகளுக்கு மாத்திரம் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், மேற்படி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் வேறு பாடங்களுக்கான பயிற்சிகளும் வழங்கப்படுகின்றதா என்பதையும்

(iv) ஆமெனில், அப்பாடங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மஹரகம ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் ஆசிரிய மாணவர்களுக்கு வதிவிட வசதிகள் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆசிரிய மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அண்மையில் மேற்படி கல்லூரியின் கட்டிடங்கள் திருத்தப்பட்டதா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்தேதி யாதென்பதையும்;

(v) மேற்படி திருத்த வேலைகளுக்காக செலவு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4764/ '14

கௌரவ அசோக் அபேசிங்க,— பொருளாதார அபிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வாழ்வின் எழுச்சி சுற்றறிக்கையின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் ஊடாக நாட்டுக் கோழிக் குஞ்சுகளை விநியோகிக்கும் வேலைத் திட்டமொன்று செயல்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், தற்போது அதற்காக செலவிடப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வேலைத்திட்டத்தின் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட பயனை பெற்றுக்கொள்ள முடிந்ததா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4854/ '14

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2002 தொடக்கம் 2013 வரையான வருடங்களுக்குரிய ஏற்றுமதிகள், மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஏற்றுமதிகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக) ஆகியவற்றிற்கிடையயிலான விகிதாசாரத்தை வருடவாரியாக அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4961/ '14

கௌரவ நிரோஷன் பெரேரா,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தின் கற்பிட்டி குடாநாட்டுக்கு அண்மையில் அமைந்துள்ள 14 தீவுகளை சுற்றுலாத்துறைக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுள்ளதென்பதையும்;

(ii) சுற்றுலாத்துறைக்காக பயன்படுத்தப்படும் மேற்படி தீவுகளை அண்மித்த பிரதேசங்களில் வாழ்கின்ற மீனவ மக்கள் தமது பூமியின் உரிமையை இழந்துள்ளமையினால் மிகக் கவலைக்குரிய நிலைக்கு ஆளாகியுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) சுற்றுலாத்துறைக்காக தீவுகள் பயன்படுத்துவதால் தமது வாழ்விடங்க ளைஇழக்கின்ற மீனவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) தமது பூமியை இழக்கின்ற பாரம்பரிய மீனவ மக்களுக்கு போதியளவு தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) சுற்றுலாத்துறைக்காக மேலே குறிப்பிடப்பட்ட 14 தீவுகளும் வழங்கப்பட்டுள்ள நிறுவனங்களின் அல்லது கம்பனிகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்களுக்கு அல்லது கம்பனிகளுக்கு எந்த அடிப்படையில் இத்தீவுகள் வழங்கப்பட்டன என்பதையும்;

(iii) மேலே (இ) (i) ல் குறிப்பிட்டுள்ள கம்பனிகளுக்கு அந்த ஒவ்வொரு தீவும் வழங்கப்பட்டுள்ள விலைகள் தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5023/ '14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கம்பஹா புகையிரத நிலையத்தின் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(ii) குறித்த நிறுவனம் தெரிவு செய்யப்பட்ட அடிப்படை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) அந்த நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் மேற்படி புகையிரத நிலையத்தின் அபிவிருத்திக்கான உத்தேச திட்டத்தை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) குறித்த அபிவிருத்திப் பணிகளுக்காக செலவாகும் பணத் தொகை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5032/ '14

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்சமயம் காணப்படும் எருமை மாடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அதிகளவு எருமை மாடுகள் காணப்படும் ஐந்து மாவட்டங்களும் ஒழுங்கு வரிசைப்படி யாவை என்பதையும்;

(iii) அரசாங்க பண்ணைகளில் வளர்க்கப்படும் எருமை மாடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) இலங்கையில் வளர்க்கப்படும் எருமை மாடு வகைகளின் (breeds) பெயர்கள் யாவை என்பதையும்;

(v) வருடாந்தம் உற்பத்தி செய்யப்படும் தயிர் லீற்றர்கள் எவ்வளவென்பதையும்;

(vi) எருமை மாடுகளின் பாலும், பசு மாடுகளின் பாலும் போசாக்கின் அடிப்படையில் ஒன்றுக்கு ஒன்று வேறுபடுகின்றதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உள்நாட்டு பால் உற்பத்தியின் பொருட்டு எருமை மாடுகளை வினைத்திறன்மிக்க விதத்தில் பயன்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) எருமை மாடுகள் பற்றிய கருத்திட்டத்திற்கென 2013 ஆம் ஆண்டில் செலவிடப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5172/ '14

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சாட்சியாளர்களின் பாதுகாப்புக்கான சட்டமூலத்தை வரைவுசெய்தல் பூர்த்தியடைந்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வரைவை நீதி அலுவல்கள் பற்றிய ஆலோசனைக் குழுவிற்கு சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) சாட்சியாளர்களின் உரிமைகள் பற்றிய சட்டங்களை ஆக்கும் பொருட்டு தாமதம் ஏற்படுவதற்கான காரணம் யாதென்பதையும்;

(iv) மேற்படி தாமத்திற்குப் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் யாவர் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5195/ '14

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) திறைசேரி தொழிற்பாட்டுத் திணைக்களத்தினால் 2013 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 2013 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலான நிதியாண்டுக்காக ஒவ்வொரு நிறுவனத்திற்கும் விடுவிக்கப்பட்ட மொத்த முற்பணத் (Imprests ) தொகை முறையே, மீண்டுவரும் செலவினம், மூலதன செலவினம் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணம் ஆகிய தலைப்புகளின் கீழ் தனித்தனியே எவ்வளவு என்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) திறைசேரி தொழிற்பாட்டுத் திணைக்களத்தினால் 2014 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 2014 ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வரை ஒவ்வொரு நிறுவனத்திற்கும் விடுவிக்கப்பட்ட முற்பணத் தொகை, முறையே மீண்டுவரும் செலவினம், மூலதன செலவினம் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணம் ஆகிய தலைப்புகளின் கீழ் தனித்தனியே எவ்வளவென்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2014 செத்தெம்பர் 26, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2674/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சிங்கப்பூரின் 'பிரிட்டிஷ் பெற்றோலியம்' நிறுவனத்திலிருந்து கடந்த காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட 'தரமான விமான எரிபொருள்' உடன் பிறிதொரு கொள்கலனில் 7500 மெட்ரிக் தொன் 'தரம் குறைவான விமான எரிபொருள்' இறக்குமதி செய்யப்பட்டதா என்பதையும்;

(ii) விமானங்களுக்கான எரிபொருள் இறக்குமதியின் போது இடம்பெற்றுள்ள மேற்படி முறைகேடு காரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு ஏற்பட்ட நட்டத்தின் பெறுமதி ரூபாய்களிலும் அமெரிக்க டொலர்களிலும் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி முறைகேடு தொடர்பாக பொறுப்புக் கூறவேண்டியவர்களுக்கு எதிராக இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) மேலே குறிப்பிடப்பட்ட எரிபொருள் இறக்குமதியின் பின்னர் 'பிரிட்டிஷ் பெற்றோலியம்' நிறுவனத்திலிருந்து எரிபொருள் கொள்வனவு செய்யப்படலாகாதென கேள்விப்பத்திர குழு ஏகமனதாக தீர்மானித்துள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3249/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தொடர்பாக,

(i) 2012ஆம் ஆண்டு முதல் இற்றை வரை ஏற்பட்டுள்ள இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(ii) 2015 - 2016 ஆம் ஆண்டுகளுக்காக எதிர்பார்த்த இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(iii) இன்றுள்ளவாறு மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள் எவ்வளவு என்பதையும்;

(iv) நிறுவனத்தில் பணியாற்றும் நபர்களின் எண்ணிக்கையையும்;

(v) அங்கு பணியாளர்கள் தேவைக்கு அதிகமாகவா அல்லது குறைவாகவா உள்ளனர் என்பதையும்;

(vi) ஊழியர் ஒருவருக்கான செலவு மற்றும் ஊழியர் ஒருவருக்கான இலாபம் ஆகியன எவ்வளவு என்பதையும்;

(vii) இன்றுள்ளவாறு வங்கி மேலதிகப் பற்றுகளுடன் குறுகிய காலக்கடன், நடுத்தர மற்றும் நீண்டகாலக் கடன்கள் ஆகியவற்றின் மொத்தம் எவ்வளவு என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3940/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு 500 மீற்றர் அண்மித்ததாக நடாத்தப்பட்டு வருகின்ற மதுபான சாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி மதுபான சாலைகளுக்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளவர்கள் யாவர் என்பதையும்;

(iii) மதுபான சாலைக்கான உரிமப் பத்திரம் வழங்கும் போது பாடசாலைகள், பன்சாலைகள் உள்ளிட்ட புனித தலங்களிலிருந்து மதுபான சாலைகளுக்கு இருக்க வேண்டிய திட்டவட்டமான தூரம் எவ்வளவென்பதையும்;

(iv) இத்தகைய உரிமப் பத்திரங்களை வழங்கும் போது ஆராயப்படுகின்ற ஏனைய வரையறைகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி (iii) மற்றும் (iv) வது விடயங்களில் குறிப்பிடப்பட்ட வரையறை களுக்கு ஏற்ப தலதா மாளிகைக்கு அண்மையில் அமைந்துள்ள மேற்படி மதுபான சாலைகள் சட்டவிரோதமானவையா என்பதையும்;

(vi) இதற்கமைய, மேற்படி மதுபான சாலைகள் தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4054/ '13

கௌரவ புத்திக பதிரண,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கெப்பிதிகொல்லாவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பதவிய வன ஒதுக்கத்திற்குரிய 31875 ஏக்கர் காடுசார்ந்த காணியை மகாவலி அதிகார சபையின் கீழ் சுவீகரித்துக் கொண்டு மக்களை அதில் குடியமர்த்துவதற்கான திட்டமொன்று உள்ளதென்பதையும்;

(ii) இயற்கை வளங்கள் பலவற்றைக் கொண்டுள்ள வன ஒதுக்கப் பிரதேசங்களை மகாவலி அதிகார சபையின் கீழ் சுவீகரித்துக் கொண்டு பலதரப்பட்ட வர்த்தகர்களுக்கு குத்தகைக்குக் கொடுப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டு வருவதாக மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) யானைகள் அதிகம் உலாவும் பிரதேசமொன்றாகிய மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள வனத் தொகுதியை துப்புரவு செய்து மக்களைக் குடியமர்த்துவதனால் யானை– மனித மோதல் உக்கிரமடையலாமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) வன ஒதுக்குக் காணிகளை மகாவலி அதிகார சபையின் கீழ் சுவீகரித்துக் கொள்வதை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அவ்வாறு நடவடிக்கையெடுப்பதெனில் அத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4294/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) டெங்கு நோயாளர்களுக்கு வைத்தியசாலைகளில் வழங்கப்பட்ட டெக்ஸ்ரன் 40 (DEXTRAN 40) என்ற சேலைன் வகையை இறக்குமதி செய்த நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(ii) மேற்படி சேலைன் வகையின் தரம் பற்றி ஏதேனும் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) 2013 சனவரி தொடக்கம் ஆகஸ்ட் வரையான காலத்தினுள் மேற்படி சேலைன் ஏற்றப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி சேலைன் வகை பற்றிய முறைப்பாடுகள் அல்லது குற்றச்சாட்டுக்கள் கிடைக்கப் பெற்றுள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4627/ '13

கௌரவ சுஜீவ சேனசிங்க,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்திற்கிணங்க அவ்வாண்டில் நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சின் மூலம் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டிருந்த வீடுகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி வரவு-செலவுத்திட்ட முன்மொழிவுகளின் பிரகாரம் அமைத்து முடிக்கப்பட்ட புதிய வீடுகளின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி வீடமைப்புக் கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை;

(iv) மேற்படி வீடமைப்புக் கருத்திட்டங்களிலிருந்து அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4639/ '13

கௌரவ பி. ஹரிசன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது கமத்தொழில் திணைக்களத்திற்குச் சொந்தமாகவுள்ள விவசாயப் பண்ணைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவற்றின் பராமரிப்புக்காகவும் ஆய்வு நடவடிக்கைகளுக்காகவும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு விவசாயப் பண்ணைக்காகவும் அரசாங்கத்தினால் செலவிடப்படும் பணத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4736/ '14

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தின் லாஹுகல கிராமத்திலுள்ள லாஹுகல மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) நடாத்தப்படும் வகுப்புகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அதிபர் உள்ளடங்கலாக ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) லாஹுகல கிராமத்தின் சிறுவர்களுக்கு கல்வி புகட்டுவதற்காகவுள்ள ஆரம்பப் பாடசாலை யாதென்பதையும்;

(ii) அண்மையில் அப்பாடசாலை சம்பந்தமாக எழுந்துள்ள பிரச்சினை யாதென்பதையும்;

(iii) மேற்படி கிராமத்திற்கு கிழக்கு மாகாண சபையின் அனுமதியுடன் அண்மையில் ஆரம்பப் பாடசாலையொன்று ஆரம்பிக்கப்பட்டதா என்பதையும்;

(iv) அப்பாடசாலையின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி பாடசாலைகள் மாகாண சபையின் கீழ் நிருவகிக்கப்பட்ட போதிலும் பொதுவாக இப்பாடசாலைகளில் சிறார்கள் தடங்கலின்றி கல்வி பயில்வதற்கான வசதிகளை வழங்குதல் மத்திய அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில். மேற்படி பாடசாலைகளில் தற்போது நிலவும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4766/ '14

கௌரவ அசோக் அபேசிங்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) குருணாகல் மாவட்டத்தில்,

(i) நெல் கொள்வனவு செய்வதற்காக தாபிக்கப்பட்டுள்ள நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) நெல் களஞ்சியப்படுத்துவதற்காக களஞ்சிய வசதிகள் எவ்வளவு உள்ளன என்பதையும்;

(iii) நெல் விளைச்சலில் அரசாங்கம் கொள்வனவு செய்யும் நெல்லின் அளவு எத்தனை சதவீதமென்பதையும்;

(iv) நெல் விளைச்சலை அதே மாவட்டத்தினுள் அரிசியாக்கி விநியோகிப்பதற்கான திட்டமொன்றை தயாரிப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5033/ '14

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தனியார் மருத்துவ ஆய்வு கூடங்களை பேணிவருவதற்காக சுகாதார அமைச்சின் அனுமதியையும் பதிவு செய்தலையும் பெறுதல் அவசியமாகுமா என்பதையும்;

(ii) ஆமெனின், தற்போது பதிவு செய்யப்பட்டுள்ள தனியார் மருத்துவ ஆய்வு கூடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சுகாதார அமைச்சின் அலுவலர்களால் தனியார் மருத்துவ ஆய்வு கூடங்களின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்படுகின்றனவா என்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்களின் ஊடாக நோயாளர்கள் துல்லியமான மருத்துவப் பரிசோதனை அறிக்கைகளை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை உறுதிபடுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) துல்லியமான மருத்துவ அறிக்கைகளை பெற்றுக்கொடுக்க தவறும் நிறுவனங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) மருத்துவ அறிக்கைகளை வழங்குகின்றபோது முறைகேடான நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனங்கள் தொடர்பில் பொது மக்கள் முறைப்பாடுகளை சமர்ப்பிக்கக்கூடிய நிறுவனமொன்று இருக்கின்றதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5173/ '14

கௌரவ அஜித் பி. பெரேரா,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த மூன்று வருட காலப்பகுதியில் ஒவ்வொரு மாதத்திற்கும் ஏற்புடையதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் ஒரு பீப்பாய் மசகு எண்ணெய்யை கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட பணத் தொகையின் சராசரிப் (Average) பெறுமதி எவ்வளவென்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை குறைவடைந்ததனால் ஏற்பட்ட அனுகூலத்தை இலங்கையின் நுகர்வோருக்கு பெற்றுக்கொடுப்பதற்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தவறியமைக்கான காரணம் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5184/ '14

கௌரவ (திருமதி) தலதா அத்துகோரள,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறு தேயிலைத் தோட்டங்களில் மண் மற்றும் நீரின் பாதுகாப்புக்கு அரசாங்க நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டமொன்று 2014 வரவு – செலவுத் திட்ட பிரேரணைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், ஒரு ஏக்கர் தேயிலைக்கு வழங்கப்படும் பணத்தொகை யாது;

(iii) தற்போது மேற்படி வேலைத்திட்டம் நடைமுறையில் உள்ள மாவட்டங்கள் யாவை;

(iv) மேற்படி மாவட்டங்களில் குறித்த நிவாரணத்தொகை முழுமையாக வழங்கப்பட்டுள்ள மற்றும் பகுதியளவில் வழங்கப்பட்டுள்ள மாவட்டங்கள் வெவ்வேறாக யாவை;

(v) மேற்படி நிவாரணம் வழங்கப்படும் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் எண்ணிக்கை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 08 மாவட்டங்ளைச் சேர்ந்த சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு மேற்படி நிவாரணப் பணத்தொகை வழங்கப்பட வேண்டிய போதிலும், கடந்த காலப் பகுதியில் மாகாண சபை தேர்தல்கள் இடம் பெற்ற மாகாணங்களுக்கு மாத்திரம் இதற்கான முற்பணத் தொகையை வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய மாவட்டங்களில் குறித்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5196/ '14

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்சமயம் இயங்கும் நிலக்கரி மின் உற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அந்த மின் உற்பத்தி நிலையங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) புதிதாக நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிலக்கரி மின் உற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி மின் உற்பத்தி நிலையங்கள் தாபிக்கப்படும் பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி நிர்மாணிப்புகளுக்குத் தேவையான காணிகளை பெற்றுக்கொள்ளும் முறையியல் யாதென்பதையும்;

(vi) நுரைச்சோலை அனல் மின் நிலையத்திலிருந்து தற்போது உற்பத்தி செய்யப்பட்டுள்ள மின் அலகுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(vii) இது இலங்கையின் மின்சாரத் தேவையில் எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5360/ '14

கௌரவ அ. விநாயகமூர்த்தி,— மீள்குடியேற்ற அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வலிகாமம் வடக்கு பிரதேசத்தின் தையிட்டியிலிருந்த மூவாயிரம் (3000) மக்களும் மயிலிட்டியிலிருந்த ஐயாயிரம் (5000) மக்களும் இன்னும் மீள் குடியேற்றப்படவில்லை என்பதையும்;

(ii) கடந்த 20 வருடங்களாக குறிப்பிட்ட அம்மக்கள் இன்னும் முகாம்களில்தான் இருக்கிறார்கள் என்பதையும்;

(iii) இலங்கை இராணுவம் இவர்களை மீள்குடியேற விடுவதில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட மக்கள் எப்போது மீள்குடியேற்றப்படுவார்கள் என்பதையும்;

(ii) இவர்களை மீள்குடியேற இடமளிக்கும்படி இலங்கை இராணுவத்திற்கு பணிப்புரை விடுக்கப்படுமா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5101/ '14

கௌரவ விஜித்த பேருக்கொட,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர (சா.த) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் மொத்த எண்ணிக்கை;

(ii) மேற்படி ஆண்டில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை;

(iii) 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் மேற்குறிப்பிட்ட பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் சதவீதம்;

(iv) 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013 ஆம் ஆண்டில் இப்பரீட்சையின் பெறுபேறுகள் அதிகரித்திருப்பின், இவ்வதிகரிப்பின் சதவீதம்;

(v) 2013 ஆம் ஆண்டில் இப்பரீட்சையில் சித்தியடைந்தோரில் உயர் தரம் கற்பதற்குத் தகைமையடைந்த மாணவர்களின் எண்ணிக்கை;

(vi) மேற்படி மாணவர்களின் சதவீதம்

எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மொணராகல மாவட்டத்தில்,

(i) 2013 ஆம் ஆண்டு க.பொ.த. (சா.த) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை;

(ii) பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை;

(iii) 2006 முதல் 2013 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடத்திலும் இப்பரீட்சையில் சித்தியடைந்த சதவீதம்;

(iv) 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013 ஆம் ஆண்டில் இப்பரீட்சையின் பெறுபேறுகள் அதிகரித்திருப்பின், இவ்வதிகரிப்பின் சதவீதம்;

(v) 2013 ஆம் ஆண்டில் இப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் உயர் தரம் கற்பதற்குத் தகைமை பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை;

(vi) மேற்படி மாணவர்களின் சதவீதம்

எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?